DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No.12/2022 |
| Police Station | Thiruppachethi P.S |
| Deposition of Witness for | L.W.12/P.W.10 |
| Name | ஜெகதீசன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A2, A4 absent.petition filed and allowed.A1, A3 present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.03.2024 at 11.30a.m

**முதல் விசாரணை:**

நான் தற்போது சிவகங்கை போதைபொருள் நுண் அறிவியல் பிரிவு சார்பு ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.12.2020 அன்று திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது இரவு 22.15 மணிக்கு சிவகங்கை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வேலாங்குளம் வேலு மகன் குமார் என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று பின்னர் நிலையம் வந்து 23.30 மணிக்கு புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.285/2020 பிரிவுகள் 147, 148, 294பி, 307, 506(2) இ.த.ச படி வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பின்னர் காவல் ஆய்வாளர் தனி அலுவலில் இருந்ததால் வழக்கில் நானே புலன் விசாரணை அதிகாரியாக இருந்து இவ்வழக்கு சம்பந்தமாக சென்று 11.12.2020ம் தேதி இரவு 00.30 மணிக்கு சம்பவ இடம் சென்று, மின்விளக்கு வெளிச்சத்தில் அங்கிருந்த சாட்சிகள் வேல்முருகன், அய்யனார் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். பின்னர் இவ்வழகக்கின் சாட்சிகளான புகார்தரர் குமார், கண்ணுற்ற சாட்சிகள் வேலு, அங்குதாய், தவசெல்வம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம்

தயார் செய்தேன். சாட்சிகள் வேல்முருகன், அய்யனார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேன். எனது விசாரணையிலும் சாட்சிகள் வாக்குமூலத்திலும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை காலை 7 மணி முதல் தேடிவந்த நிலையில் இந்த வழக்கில் 1, 2 எதிரிகள் காலை 10.30 மணியளவில் வேலாங்குளம் விலக்கில் நின்று கொண்டிருப்பதாக நம்பகமான தகவல் கிடைத்து அங்கு சென்று எதிரிகள் இருவரையும் காரணம் கூறி உச்சநீதிமன்ற வழக்காட்டுதலின் படி கைது செய்து அங்கிருந்த சாட்சிகளான செந்தில்குமார், அய்யாவு முன்னிலையில் 10.45 மணிக்கு 1ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அத்தாட்சி, அதே சாட்சிகள் முன்னிலையில் மேற்படி T.வேலாங்குளம் சுடுகாடு அருகில் எதிரிகள் 1, 2 பயன்படுத்தி இரு அருவாள்களை சாட்சி முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி, பின்னர் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்து நிலையம் கொணடு வந்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். ஒப்புதல் வாக்கமூலம் சாட்சிகளான செந்தில்குமார், அய்யாவு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா.1 குமாரை மறுவிசாரணைசெய்த போது பேர் தெரிந்த அடையாளம் தெரிந்த 4 பேர்கள் மட்டும் வந்தார்கள் என்றும், கடைசியாக பேர் தெரியாத, அடையாளம் தெரிந்த 1 நபர் வரவில்லை என கூறியதால் மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பையும் வழக்கு சொத்துக்களையும் மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** பார்வை மகஜர் **அ.சா.ஆ.3.** வரைபடம் **அ.சா.ஆ.4**. ஒப்புதல் வாக்குமூலம் **அ.சா.ஆ.5.** அத்தாட்சி. **அ.சா.ஆ.6. படிவம் 91 அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**கு.வி:**

அ.சா.1 சரவணா தனியார் மருத்துவமனையில் இருந்த போது கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 தனது முதன்மை விசாரணையில் காவல்நிலைய வழக்கு பதிவு செய்து கடந்த 11.12.2020ம் தேதி சரவணா மருத்துவமனையிலிருந்து புகார் கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவ நடந்த இடம் இருட்டு என விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற எந்த ஆவணமும் இந்த நீதிமன்றத்தில்

நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, விபத்து பதிவேடு தாக்கல் செய்துள்ளேன். விபத்து பதிவேடு அ.சா.1 சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அரசு வழக்கில் சிவகங்கை அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக அ.சா.1 அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததை சொல்லியுள்ளீர்களா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. அரசு தரப்பு சிவகங்கை அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக அ.சா.1 அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததாக உள்ளதா என்றால் சரியல்ல. அரசு தரப்பில் ராஜாஜி மருத்துவமனையில் அ.சா.1 எந்த சிகிச்சையும் பெறவில்லை என்றால் அதுபற்றி எனக்கு புலன் விசாரணையில் தெரியவில்லை. அ.சா.1 ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சரவணா தனியார் மருத்துவமனையில் அ.சா.1 சிகிச்சை பெற்றதாக சொல்லப்படும் விபரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு நினைவில்லை, எனது புலன் விசாரணையில் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபரம் தெரியும். எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் நிலப்பிரச்சனை மற்றும் இருசக்கர வாகனம் சம்பந்தமாக பிரச்சனை இருந்ததால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் என்ன நிலப்பிரச்சனை மற்றும் யாருடைய இருசக்கர வாகனம் சம்பந்தமான பிரச்சனை என்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இறுதி விசாரணை காவல் ஆய்வாளர் செய்ததால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. வழக்கில் புகாரை அ.சா.1 எழுதவில்லை என்றால் சரிதான், புகாரை காயம்பட்ட நபரான அ.சா.1 தனக்கு காயம் இருந்ததால் என்னுடன் இருந்த உறவினர் எழுதியதை தான் படித்துப் பார்த்ததாக சொன்னார். அந்த உறவினர் யார் என்பதை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகாரை நான் எழுதிவிட்டு, காயம்பட்டவரின் உறவினர் எழுதியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் அ.சா.1 மதுஅருந்தியதாக உள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் அ.சா.1 சிகிச்சைக்கு சேர்ந்த நேரத்தில் 5 தெரிந்த நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சம்பவ இடம் இருட்டு, பின்னிட்டு திட்டமிட்டு வழக்கில் சேர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அரசு வழக்கில் 11.12.2020ம் தேதி காலை 9 மணிக்கு சரவணா மருத்துவமனையில் இருந்த பிறகு தான் அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளார், ஆனால் 10.12.2020 இரவு 20.30 மணிக்கு முதல்

தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அ.சா1க்கு வழங்கப்பட்ட காயச்சான்றிதழ் சிறுகாயம் என்றுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணை, குறுக்கு விசாரணையில் எதிரிகள் தன்னை மோசமான வார்த்தைகளால் திட்டியதாகவும், கொலை மிரட்டல் விட்டதாகவும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கில் நேரில் பார்த்ததாக சாட்சியம் அளித்த அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான், சிறிய கிராமத்தில் இருட்டு நேரத்தில் சம்பவத்தை பார்த்தவர்கள். மருத்துவ சிகிச்சை பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் தான் காயச்சான்றிதழ் வழங்கப்படும் என்றால் சரிதான். காயச்சான்று தாக்கல் செய்துள்ளேன், சிகிச்சை பெற்ற ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் என்பதால் அவருக்கு தான் தெரியும். அரசு தரப்பில் 161 வாக்குமூலம் நீங்கள் பதிவு செய்தீர்களா அல்லது காவல் ஆய்வாளர் பதிவு செய்தாரா என்றால் மருத்துவர்கள் மற்றும் என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார். மற்ற சாட்சிகளை நான் விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். வா.சா.7, 8 அய்யாவு மகன் செந்தில்குமார், மாசாணம் மகன் அய்யாவு ஒப்புதல் வாக்குமூலம் தங்கள் முன்னிலையில் வாங்கவில்லை என்றும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்றும் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அரசு வழக்கில் வா.சா.1 முதல் வா.சா.5 வரை சாட்சிகள் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் எந்தெந்த சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்தேன் என்றால் வா.சா.6 அய்யனார் மற்றும் வா.சா.9 வேல்முருகன். பார்வை மகஜர் சாட்சிகள் தன் முன்னிலையில் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை, அதில் தன்னுடைய கையெழுத்து இல்லை என்று சொல்லியுள்ளனர் என்றால் சம்பவ இடத்தில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் தான் பார்வை மகஜர் தயார் செய்தேன். அரசு வழக்கில் சம்பவத்தில் 5 நபர்கள் ஈடுபட்டதாக புகாரில் உள்ளது என்றால் சரிதான், சாட்சிகளிடம் மறுவாக்குமூலம் நான் தான் வாங்கினேன். சம்பவத்தில் ஈடுபட்ட 5வது நபர் யார் என்று விசாணையில் தெரிந்துகொள்ளவில்லை என்றால் எனது மறுவிசாரணையில் புகார்தாரர் தனது விசாரணையில் சம்பவத்தில் ஈடுபட்ட 4 தெரிந்த நபாகள் என்று கூறியுள்ளார், பேர் தெரியாத 5வது நபர் பெயரை மிகைப்படுத்தி கொடுத்ததாகவும், தற்போது சுயநினைவோடு மேற்படி 4 நபர்கள் ஈடுபட்டதாக கூறியுள்ளார். அ.சா.1 புகார் கொடுக்கும் போது சுயநினைவோடு இல்லை

என்றால் சரியல்ல. சம்பவ சாட்சிகள் வா.சா.1 முதல் 5 வரை அனைவரும் இவ்வழக்கல் முரணற்றபடி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ நடந்த இடத்தை ஆய்வு செய்து ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றினீர்களா என்றால் எதரிகளை கைது செய்யும் போது 1ம் எதிரி சாட்சிகள் முன்னிலையில்கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அத்தாட்சியில் சம்பவத்தில் பயன்படுத்தி இரண்டு அருவாள்களை கைப்பற்றினேன். இரு அருவாள்களையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினீர்களா என்றால் உட்படுத்தினேன். நான் அத்தாட்சியில் கைப்பற்றிய அருவாள்களை நீதிமன்றத்தில் சான்று பொருள்களாக குறியீடு செய்யவில்லை என்றால் ரிமாண்டின் போது நீதித்துறை நடுவர் அவர்களிடம் படிவம் 91ல் ஆஜர்செய்து கையொப்பம் பெறப்பட்டு பின்னர் புலன்விசாரணையில் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர் தனது விசாரணையை முடித்து விட்டு பின்னர் தனிவிசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் மடிக்கணினியில் நானே தட்டச்சு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்த மடிக்கணினியை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கன் தோதிற்காக போலி ஆவணங்கள் தயார் செய்து எதிரிகள் மீது அரசு வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சம்பவ நடந்த இடம் இருட்டு என்பதால் யார் எதிரிகள் என்பதை அடையாளம் காணமுடியாது என்றால் வாதியின் வீட்டு வேப்பமரத்தில் மின்விளக்கு எரிந்தது. எரிந்த மின்விளக்கு என்பது குண்டுபல்பு ஆகும். குண்டுபல்பு எரியும் போது எதற்காக லைட் வைத்து பார்வை மகஜர் தயார் செய்தீர்கள் என்றால் மின் விளக்கு வெளிச்சத்தில் தயார் செய்தேன். எதிரி கருப்பசாமியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினீர்களா என்றால் T.வேலாங்குளம் விலக்கில் வைத்து வாங்கினேன். கைப்பற்றுதல் இல்லாத ஒப்புதல் வாக்குமூலம் சட்டப்படி செல்லாது என்றால் சரிதான். வழக்கிற்காக அருவாள் கைப்பற்றியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. படிவம் 91 நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ரிமாண்டின் போது நீதித்துறை நடுவர் அவர்களிடம் சமர்ப்பித்து கையொப்பம் பெற்றுள்ளேன். எதிரிகளிடமிருந்து பெற்றதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் பிரிண்ட் பார்மில் உள்ளது என்றால் சரியல்ல என்னால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த வழக்கில் பொதுமக்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்,

சம்பவ நேரம் இரவு மற்றும் சம்பவ இடம் இருட்டாக இருந்ததால் பொதுமக்கள் யாரும் இல்லை. இருசக்கர வாகனம் ஓட்டி கீழே விழுந்தால் காயம் ஏற்படும் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் அ.சா.1 மது அருந்தி இருசக்கர வாகனம் ஒட்டி கீழே விழுந்து சிறுகாயம் ஏற்பட்டதால் அதை பயன்படுத்தி எதிரிகள் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கில் T.வேலாங்குளம் கிராமத்திலிருந்து சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை சென்றதாக எந்தவொரு சாட்சியமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேடு மட்டும் சிகிச்சை பெற்றதாக சொல்லபடும் ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. காயம்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 எத்தனை மணிக்கு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தார் எத்தனை மணிக்கு மேற்படி மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்கு அரசு ராஜாஜி மருத்துவமனை மதுரைக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு சிகிச்சைக்கு சேர்ந்து அங்கிருந்து எத்தனை மணிக்கு மதுரை சரவணா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்ற எந்த விபரமும் இந்த வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, இரவு 11.05 மணிக்கு சிவகங்கை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாக விபத்து பதிவேட்டில் உள்ளது, ராஜாஜி மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது, அ.சா.1 சிவகங்கை அரசு மருத்துவமனையில் புகாரை பெற்றேன். சம்பவ இடத்திலிருந்து சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு காயம்பட்டவர் எந்த வாகனத்தில் சென்றார் என்றால் 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்றார். 108 ஆம்புலன்ஸின் ஓட்டுநரையோ அல்லது செவிலியரையோ சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், நான் முதல்விசாரணை மட்டுமே முடித்தேன். காயம்பட்டவர் 3 மணிநேரம் காலதாமதமாக தான் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்றார் என்றால் சரியல்ல, 2 1/2 மணிநேரம் காலதாமத்தில் தான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றார். எதிரி கடுமையாக தாக்கப்பட்டிருக்கிறார் என்பதை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் புகாரில் சொல்லியுள்ளார். சிவகங்கை அரசு மருத்துவமனையிலிருந்து மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சேர்ந்ததாக சொல்லபடும் விபத்து பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாக்குமூலமாக தான் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சேர்ந்ததாக சொல்கிறேன் அதுசம்பந்தமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் எந்த ஆவணத்திலும் மதுரை அரசு மருத்துவமனையில்

சிகிச்சை பெற்றதாக சொல்லவில்லை, நான் சிவகங்கை அரசு மருத்துவமனயில் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்தேன். மேல்விசாரணை ஆய்வாளர் தான் செய்தார். முதன்மை விசாரணை முறையாக செய்யாததால் தான் அ.சா.1 சிவகங்கை அரசுமருத்துவமனையிலிருந்து மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு சேர்ந்ததாக சொல்லப்படும் விபரம் தெரியவில்லை என்றால் சரியல்ல, நான் சிவகங்கை அரசு மருத்துவமனையில் புகார் பெற்று போது மருத்துவர்கள் சிகிச்சை பார்த்து கொண்டதால் ந்ரன புகாாரை பெற்றுவந்தவுடன் 3 மணிநேரத்திற்குள்ளாக வழக்கு பதிவு செய்துவிட்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்து பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்து, சம்பவம் உண்மை என்பதால் எதிரிகளை பார்க்க சென்றேன். அரசு வழக்கில் அ.சா.1 புகார் கொடுப்பதற்கு 1 நாட்களுக்கு முன்பே வழக்குபதிவு செய்து போலியாக ஆவணங்கள் தயார் செய்து அதன்பின்பு 11.12.2020ம் தேதி காலை 9 மணிக்கு பிறகு சரவணா மருத்துவமனையில் அ.சா1 இருந்ததாக புகார் பெற்று அரசு வழக்கை தாக்கல் செய்து எதிரிகளுக்கு எதிராக எந்த உரிய மருத்துவ ஆவணங்களும் இல்லாமல் பொய்யாக தாக்கல் செய்கிறேன், இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் பட்டியல் சாட்சிகள் 6 முதல் 9 என்னிடம் சாட்சியம் அளித்து கையொப்பம் இட்டது போன்று மேற்படி சாட்சிகளை போலவே கையொப்பம் செய்து அதனை உண்மை என்று நீதிமன்றம் நம்பும் வகையில் இந்த நீதிமன்றத்தில் மேற்படி பொய் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதால் எதிரிகள் எங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க உரிமையுள்ளவர்கள் என்றால் சரியல்ல.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**